**O.S.No. 45/2022**

**நாள் 01.08.2025**

**பி,வா.சா.1 அஜீஸ்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

2ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த தம்பி. வழக்கு குறித்த விவரம் தெரியும். வழக்கை பாத்திமுத்துபீவி போட்டுள்ளார். வழக்கு அடமான வழக்கு என்றால் சரிதான். வழக்கில் கண்ட சொத்து விவரங்கள் என்னுடைய சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அடமான சொத்து விவரங்கள் எனக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைத்த சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்தை அடமானம் காண்பித்து தான் நான் வாதியிடம் கடன் பெற்றேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் என்ன கூறியுள்ளேன் என்றால் நான் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்துவிட்டதாகவும், வாதி அடமானத்தை செல்லடித்து தரவில்லை என கூறியுள்ளேன். 2021 தேதியில் வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை நான் பெற்றுள்ளேன். மேற்படி அறிவிப்பில் கண்ட சங்கதிகளை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்தேன். மேற்படி அறிவிப்பில் வாதி நான் கடன் பெற்றதாக சொல்லக்கூடிய ரூ.4 லட்சம் மற்றும் வட்டியை செலுத்தவில்லை என்றால் என் மீது வழக்கு தாக்கல் செய்வதாக கூறியிருந்ததை நான் படித்து பார்த்துள்ளேன். மேற்படி அறிவிப்பு பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். அந்த பதில் அறிவிப்பை இவ்வழக்கில் தாக்கல்செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும். வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு இன்றைய தேதி வரை எந்த பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு பணம் செலுத்திஇருந்தேன் என்றால் பதில் அறிவிப்பிலேயே நான் பணம் செலுத்திய விவரத்தை கூறியிருப்பேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக பதில் அறிவிப்பு அனுப்பியதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 23.03.2015 தேதியில் வாதியிடம் ரூ.4 லட்சம் கடன்பெற்றுக்கொண்டு, நான் அடமானம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அடமானம் எழுதிக்கொடுத்த தேதியில் இருந்து வாதி வழக்கு தாக்கல் செய்யும் வரை வாதிக்கு வட்டி அசல் எதுவும் செலுத்தவில்லை என்றாலும், அதனால் தான் வாதி என் மீது வழக்கு தாக்கல்செய்துள்ளார் என்றால் சரியல்ல.

நான் பொய்யாக மேற்படி தொகையை வாதியிடம் கொடுத்துவிட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் தொகையை செலுத்தியதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாதியிடம் கேட்டதற்கு அவர் ஆவணத்தை தொலைத்துவிட்டதாக கூறினார். மேற்படி ஆவணம் வாதி தொலைத்துவிட்டதாக கூறியது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன். நான் இதுநாள் வரை வாதிக்கு ரூ.4 லட்சத்திற்கும் அசலும் வட்டியும் செலுத்தி போகவில்லை என்றால் சரியல்ல. எனவே வாதி கோரியபடி வழக்கை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல. வாதியிடம் தொகையை செலுத்தியதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்வவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி வழக்கை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**மவி இல்லை.**